சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி மண்டலம் கோட்டம் எண்.30 சாய்பாபா தெரு அரசு ஆரம்ப சுகாதார அலுவலக வளாகத்தில் நேற்று (27.10.2025) வார்டு சபா சிறப்பு கூட்டத்தில் சிறப்பு பார்வையாளராக சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், பங்கேற்று பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.இரா.பிருந்தா தேவி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, ஆணையாளர் டாக்டர்.மா.இளங்கோவன் ஆகியோர் உடன் உள்ளனர்.

மதுரை வடக்கு மாவட்ட கழக செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி முன்னிலையில் அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தின் மதுரை வடக்கு மாவட்ட அம்மா பேரவை பொருளாளர் ராஜசேகர் என்ற சிம்பு மற்றும் அவரது ஆதரவாளர்கள் திமுகவில் இணைந்தனர். உடன் கழக மாநில விவசாய அணி துணை செயலாளர் ஆர். கணேசன், பகுதி பொறுப்பாளர் க.ராஜகோடி மற்றும் வட்ட பொறுப்பாளர் டி.சி.கல்யாணி , வார்டு 65 பி. பாண்டி ஆகியோர் பங்கேற்றனர்.

மாற்றுக் கருத்துகளுக்கு மதிப்பளிப்பதே ஜனநாயகப் பண்பு! அரசுக்கு நன்றி, பாராட்டு!

தனியார் பல்கலைக்கழகச் சட்ட மசோதா திரும்பப் பெறப்பட்டதை வரவேற்கிறோம்!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, அக். 28-

தனியார் பல்கலைக்கழகச் சட்ட மசோதா திரும்பப் பெறப்பட்டதை வரவேற்கிறோம்! மாற்றுக் கருத்துகளுக்கு மதிப்பளிப்பதே ஜனநாயகப் பண்பு என்றும், தமிழ்நாடு 'திராவிட மாடல்' அரசுக்கு நன்றி, பாராட்டு தெரிவித்தும் திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார். அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு அரசின் சார்பில் கடந்த சட்டப் பேரவைக் கூட்டத் தொடரின் போது கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட தனியார் பல்கலைக்கழக சட்டத் திருத்த மசோதா நேற்று முன்தினம் (26.10.2025) திரும்பப் பெறப்படுவதாகத் தமிழ்நாடு அரசின் உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் அறிவித்திருப்பது வரவேற்கத் தக்கதாகும்.

2019 ஆம் ஆண்டு அப்போதைய அ.தி.மு.க. அரசால் கொண்டுவரப்பட்ட தனியார் பல்கலைக் கழகச் சட்டத்தில் சில திருத்தங்களை அண்மையில் மேற்கொண்டு, திருத்தச் சட்ட மசோதாவைத் தமிழ்நாடு சட்டமன்றத்தில் தாக்கல் செய்திருந்தனர். அதில் சமூகநீதிக்கும், கல்வி உரிமைக்கும் ஆபத்தை விளைவிக்கும் சில அம்சங்கள் இருப்பதாகப் பொதுத் தளங்களிலும், ஆசிரியர் மாணவர்கள் மத்தியிலும் கவலை எழுப்பப் பட்டது.

இது குறித்து, 'உண்மை' இதழில் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது, "வாதாட வேண்டியவற்றுக்கு வாதாடுவது எடுத்துரைப்பது மூலமும், போராட வேண்டிவதற்குப் போராடுவதற்கும் பக்குவப்பட்ட இயக்கம் நம்முடைய இயக்கம். எல்லா அம்சங்களையும் சீர்தூக்கிச் சிந்தனை செய்யவேண்டும். அரசே முழுமையாக கல்வி நிலையங்களை நடத்த வேண்டும் என்பது நம்முடைய இலக்கு என்றாலும், அந்த அளவுக்கு நிதி, நிர்வாக வசதிகள் முதலியவை இப்போது இல்லை என்றாலும், தவறுகளைச் சுட்டிக் காட்டித் திருத்தம் கோரலாம்" என்று குறிப்பிட்டிருந்தோம்.

நம்மைப் போன்றவர்களின் கவலை!

அரசே முழுமையாக கல்வித் துறையை நடத்தும் வரை, எல்லோருக்கும் கல்வி கிட்டாக் கனியாக ஆகிவிடக் கூடாது என்பதால் தான், பொருளாதார வாய்ப்புள்ளவர்கள் தனியார் கல்வி நிலையங்களில் படிக்கும் வாய்ப்பை உருவாக்கும் வகையில் தனியார் கல்வி நிறுவனங்கள், கல்லூரிகள் தொடங்கப்பட்டன. அவை கல்வி வளர்ச்சி என்னும் அளவில் பலன்களைத் தந்துள்ளதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். எனினும், அதற்கு சமூகநீதியை விலையாகக் கொடுக்க முடியாது; அது கல்வி வணிகத்திற்கும் வழிவகுத்துவிடக் கூடாது என்பதே நம்மைப் போன்றவர்களின் கவலையாகும்.

அரசுக்கு நன்றி, பாராட்டு!

நமது நியாயமான கவலைகளைப் புரிந்து கொள்வது தான் ஒரு மக்களாட்சியின் அடிப்படை. சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்பட்டுவிட்டாலும், மக்கள் மன்றத்தில் எழுந்துள்ள குரல்களைக் கருத்தில் கொண்டு. அச் சட்ட மசோதாவைத் திரும்பப் பெற்று மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்படும் என்று அறிவித்திருப்பது தமிழ்நாடு 'திராவிட மாடல்' அரசின், அதன் முதலமைச்சரின் பக்குவத்தையும், ஜனநாயகப் பண்பையும் எடுத்துக் காட்டுகிறது. அதற்கு நமது நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

கல்வியை எல்லோருக்கும் கொண்டு செல்வதற்கான முயற்சிகளையும், அதில் சமூகநீதி நிலைநாட்டப் படுவதையும் விழிப்புடன் முன்னெடுப்போம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

மாநில அமைப்பாளர் ந.இராமசாமி தலைமையில்

கருநாடக மாநில தி.மு.க. சார்பில் முப்பெரும் விழா!

அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பங்கேற்பு!

பெங்களூரு, அக். 28 -

கருநாடக தி.மு.க. சார்பில் முப்பெரும் விழா 12.11.2025 தேதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அலசூர் ஏரி அருகில் உள்ள பெங்களூர் தமிழ்ச்சங்கம் திருவள்ளுவர் அரங்கில் நடைபெறுகிறது.

விழாவில் மாநில தி.மு.க. இளைஞரணி துணை அமைப்பாளர் மு.இராஜசேகர் வரவேற்புரை ஆற்றுகிறார். மாநில தி.மு.க. அமைப்பாளர் ந.இராமசாமி தலைமையில் தி.க.தலைவர் மு.ஜானகிராமன், துணைத் தலைவர் குணவேந்தன், கழக வழக்கறிஞர்கள் பாலாஜி சிங், சுரேஷ் பாபு, மாநில நிர்வாகிகள் மொ.பெரியசாமி, ஜி.இராமலிங்கம், குமுதா கருணாநிதி, பொதுக்குழு உறுப்பினர்கள் சிக்பெட் இராமன், கே.சிகாமணி, அன்பழகன், பிரான்ஸிஸ் சிவலிங்கம், முருகமணி மற்றும் இரா நாம்தேவ், ஏ.டி.ஆனந்தராஜ், கே.எஸ். சுந்தரேசன் ஆகியோர் முன்னிலையில் கழக முன்னோடிகளுக்கு விருதுகள் வழங்கி தமிழ்நாடு கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கருநாடக சுகாதாரத்துறை அமைச்சர் தினேஷ்குண்டுராவ் . சிவாஜி நகர் சட்டமன்ற உறுப்பினர் ரிஷ்வான் அசரத், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் தே.மதியழகன், எம்.எல்.ஏ., கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் வை.பிரகாஷ், எம்.எல்.ஏ., ஓசூர் மேயர் எஸ்.ஏ. சத்யா, ஓசூர் மாநகராட்சி மன்றம்மத்திய தொ.மு.ச.பேரவை தலைவர் கி.நடராசன், தலைமை இளைஞரணி துணைச் செயலாளர் பி.எஸ். சீனிவாசன், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை செயலாளர் ஆர்.எஸ்.கிரிஷ் சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

மாநில தி.மு.க. முன்னாள் பொறுப்புக்குழு உறுப்பினர் வி.எஸ்.மணி நன்றி கூறுகிறார்.

தமிழ்நாடு மின்கழகத் தொ.மு.ச. நிர்வாகிகள் தேர்தல்

தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். 38/சிபிடி, பேரவை இணைப்பு எண். 26) விழுப்புரம் மின்திட்ட நிர்வாகிகள் தேர்தல், கழகத்தின் தணிக்கைக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் அ.சரவணன் அவர்களை மேலிடப் பார்வையாளராகவும், திருச்சி மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் எஸ்.ஜோசப் நெல்சன் அவர்களை தேர்தல் ஆணையாளராகவும் கொண்டு நடத்தப்பட்டது. அதன்படி கீழ்க்கண்டவர்கள் தேர்தலில் வெற்றி பெற்று நிர்வாகிகளாக தேர்வு பெற்றுள்ளனர்.

விழுப்புரம் மின் திட்டம்

திட்டத் தலைவர் – S. அனில்குமார்

திட்ட துணைத் தலைவர்கள்–1) V. செந்தில்குமார், 2) V. முரளிதரன், 3) J. ராஜேஷ்கண்ணா

திட்டச் செயலாளர் – P. சண்முகம்

திட்ட துணைச் செயலாளர்கள்–1) R. இராசப்பன், 2) T. செல்வராஜீ, 3) S. பன்னீர்

திட்டப் பொருளாளர் – S. வள்ளல் பிரபு

கோட்டச் செயலாளர்கள்–1) G. பாபு (விழுப்புரம் மத்திய), 2) K. திருமாள் (செஞ்சி), 3) M. ராஜா (கண்டமங்கலம்), 4) B. சுரேஷ் (திண்டிவனம்), 5) J. முருகன் (விழுப்புரம் விநியோகம்)

இடம்:கலைஞரகம்
நாள்:27.10.2025

மு.சண்முகம், Ex.MP
பொதுச்செயலாளர்,
தொ.மு.ச. பேரவை

திருப்பூர் கிழக்கு மாவட்டம்

குண்டடம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் சிவ.செந்தில்குமார் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி! நேற்று இறுதிச் சடங்குகள் நடைபெற்றன!

திருப்பூர், அக்.28-

திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழக முன்னாள் அவைத் தலைவர் மு.சிவசபாபதி அவர்களின் மகனும் - குண்டடம் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளருமான சிவ.செந்தில்குமார் (வயது 61) நேற்று முன்தினம் (26.10.2025) பகல் 3.00 மணியளவில் மாரடைப்பால் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவருக்கு செ.தமிழரசி என்ற மனைவியும் (ஆறுதொழுவு ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர்) செ. தீபிகா, செ.சிந்து மஞ்சலி என்ற இரு மகள்களும் உள்ளனர்.

சிவ.செந்தில்குமாரின் இறுதிச் சடங்குகள் நேற்று (27.10.2025) மதியம் 12.00 மணியளவில் ஆறுதொழுவில் உள்ள அவரது தோட்டத்தில் நடைபெற்றது.

இதில் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

தென்காசி மாவட்டத்திற்கு வருகை தரும்

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தலைமை!

இரா.ஆவுடையப்பன் – வே.ஜெயபாலன் – ஈ.ராஜா முன்னிலை!

தென்காசி, அக்.28-

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் நாளை (29.10.2025 -புதன் கிழமை) தென்காசி மாவட்டத்திற்கு வருகை தர உள்ளதை முன்னிட்டு அன்று காலை 8.30 மணி அளவில் ஆலங்குளத்தில், ஆலங்குளம், தென்காசி, கடையநல்லூர், சங்கரன்கோவில், வாசுதேவநல்லூர்ஆகிய சட்டமன்ற தொகுதிகளின் சார்பில் சுமார் 25,000 பேர்கள் கலந்து கொள்ளும் சிறப்பான வரவேற்பு கொடுக்கப்படுகிறது. இந்நிகழ்வு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் தலைமையில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது என நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

திராவிட மாடல் முதலமைச்சர். அவர்கள் நாளை (29.10.2025) தென்காசி மாவட்டத்திற்கு வருகை தந்து பல்வேறு அரசு துறைகளின் சார்பில் நடைபெற உள்ள அரசு நிகழ்வில் பங்கேற்று லட்சக்கணக்கான பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்கள்.

முதலமைச்சர் அவர்கள் 28.10.2025 அன்று சென்னையிலிருந்து விமானம் மூலம் புறப்பட்டு மாலையில் மதுரைக்கு வருகிறார். அங்கிருந்து சாலை மார்க்கமாக கோவில்பட்டிக்கு மாலை 7 மணி அளவில் வருகிறார்கள். கோவில்பட்டியில் அமைச்சர் பெ.கீதா ஜீவன் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுகிறது. பின்னர் திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இளையரசனேந்தல் சாலையில் அமைந்துள்ள கோவில்பட்டியில் மேற்கு நகர கலைஞர் அறிவாலயத்தையும், அங்கு நிறுவப்பட்டுள்ள முத்தமிழ் கலைஞர் அவர்களின் வெண்கல முழு திருவுருவச் சிலையையும் திறந்து வைக்கிறார்கள். அங்கிருந்து நெல்லை புறப்பட்டு செல்கிறார்கள்.

மறுநாள் 29ஆம் தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காலை 800 மணி அளவில் புறப்பட்டு தென்காசியில் நடைபெற உள்ள அரசு விழா நிகழ்வில் பங்கேற்க வருகிறார்கள். வரும் வழியில் அன்று காலை 830 மணிக்கு முதலமைச்சர் அவர்களுக்கு நெல்லை மேற்கு மாவட்டம் ஆலங்குளத்தில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நெல்லை மேற்கு மாவட்டம் ஆலங்குளம் தொகுதி, தென்காசி தெற்கு மாவட்டம் தென்காசி, கடையநல்லூர் தொகுதிகள், சங்கரன்கோவில் வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில், வாசுதேவநல்லூர், தொகுதிகள் ஆகிய 5 சட்டமன்ற தொகுதிகள் சார்பில் சுமார் 25,000 பொதுமக்கள் கலந்து கொண்டு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தலைமையில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. பின்னர் முதலமைச்சர் அவர்கள் தென்காசி இலத்தூர் விலக்கு ஆய்க்குடி சாலையில் நல்லமணி கல்லூரிக்கு பின்புறம் பெட்ரோல் பங்க் அருகில் அருகில் அமைக்கப் பட்டுள்ள ஜாஸ் ஸ்மார்ட் சிட்டி மைதானத்தில் நடைபெறும் அரசு விழா நிகழ்வில் காலை 11 மணியளவில் பங்கேற்று பல்வேறு நலத்திட்ட உதவிகளை லட்சக்கணக்கான பயனாளிகளுக்கு "எல்லாருக்கும் எல்லாம்"என்ற அடிப்படையில் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்கள். அரசு நிகழ்ச்சி முடிவடைந்தவுடன் முதல்வர் அவர்கள் ஆய்க்குடி அமர்சேவா சங்கம் செல்கிறார்கள்.

அதன் பின்னர் முதல்வர் அவர்கள் மதியம் குற்றாலம் சுற்றுலா மாளிகையில் தங்கி ஓய்வு எடுக்கிறார்கள்.பின்னர் அங்கிருந்து மாலையில் புறப்பட்டு மதுரை செல்கிறார்கள்.

தென்காசி மாவட்டத்திற்கு வருகை தரும் திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களுக்கு ஆலங்குளத்தில் எழுச்சியுடன் கூடிய மிகசிறப்பான வரவேற்பு கொடுக்கப்பட வேண்டும்.

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வருகைக்கான சிறப்பான ஏற்பாடுகளை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் தென்காசி மாவட்ட பொறுப்பு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன், நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன்,தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன்,தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் செய்துள்ளனர்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

"எல்லார்க்கும் எல்லாம்" என்ற திராவிட மாடல் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தென்காசி மாவட்டத்திற்கு வருகை தர உள்ளதை முன்னிட்டு 5 சட்டமன்றத் தொகுதி பொது மக்கள் மிகுந்த ஆர்வத்துடன், உற்சாகத்துடன் காணப்பட்டு வருகின்றனர்.

திருப்பூர் கிழக்கு மாவட்டம்

குண்டடம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் சிவ.செந்தில் குமார் மறைவு!

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக்.28-

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

திருப்பூர் கிழக்கு மாவட்டம் - காங்கேயம் தொகுதி - குண்டடம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் சிவ செந்தில்குமார் நேற்று இயற்கை எய்தினார் என்பதை அறிந்து வருந்துகிறேன்.

அன்னாரின் மறைவால் வருந்தும் சிவ செந்தில் குமாரின் குடும்பத்தினருக்கும் மற்றும் கழகத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வண்ணை கே.எஸ்.பாண்டியன்

அக்டோபர் 28 (1952)



கழகத்தில் நீங்காப் பற்றுக் கொண்டு உழைத்தவரும் – சிறந்த பொதுநலத் தொண்டராகிய இவர், கழகம் துவங்கிய காலத்தில், வடசென்னை பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

1937ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் தளரா உழைப்பாளராக இருந்ததுடன், அப்போராட்டத்தில் சிறை சென்ற செயல்வீரர்.

தி.மு.கழகம் தொடக்க நாள் கூட்டத்தை சிறப்புற நடத்த காரணமானவர்களில் இவரும் ஒருவர்.

"கொள்கைக்காக வாழ்ந்து, கொள்கைக்காக உயிரை இழந்த அந்த அருமை வீரர் ஆற்றிய தொண்டுப்பாதையில் அவர் சிந்திய இரத்தத்தை நினைவில் கொண்டு, நான் சென்று கொண்டிருப்போம்!" என, இவர் எதிர்க்கட்சியினரால் படுகொலை செய்யப்பட்ட மறுநாள் 9–11–1952 நாளிட்ட "திராவிட நாடு" தலையங்கம் வெளியிட்டு சிறப்பித்தது.

தலைமைக் கழகம்
தி.மு.க.